**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 14.11.2025

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் மாநில அளவிலான போதைப் பொருள் விழிப்புணர்வு குறும்படப் போட்டியில் வெற்றி

தமிழ்நாடு அரசின் போதை பொருள் தடுப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு காவல் துறையின் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு (Narcotic Intelligence Bureau – CID) மாநில அளவிலான போதைப் பொருள் விழிப்புணர்வு குறும்படப் போட்டியைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக ஏற்பாடு செய்தது.

இந்தப் போட்டியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவிப்பின்படி இளங்கலை தொழில்நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்) மாணவர்கள் 8 அணிகளாக கலந்து கொண்டனர்.

அதில் நான்கு அணிகள் மாநில அளவில் முதல் 25 அணிகளில் இடம்பிடித்தன. இதில் மூன்றாம் பரிசாக ரூ.25,000/– காசோலையை AEC&RI, கோயம்புத்தூரைச் சேர்ந்த மாணவர்கள் வி. விக்னேஷ் மற்றும் கி. சிபி பெற்றனர். இதனுடன், மற்ற மூன்று அணிகளும் தலா ரூ.10,000/– பணப்பரிசும் பாராட்டு சான்றிதழ்களையும் பெற்றனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் தலைமை இயக்குநர் திரு.ஏ.அமல்ராஜ் அவர்கள் தலைமை வகித்து, 12.11.2025 அன்று சென்னை, NIB–CID தலைமையகத்தில் நடைபெற்ற விழாவில் விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். அவர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்களின் படைப்பாற்றலையும், உற்சாகமான பங்களிப்பையும் பாராட்டினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் ஆர்.தமிழ்வேந்தன் அவர்கள், "போதை இல்லா தமிழ்நாடு" என்ற இலக்கை அடைய போதைப்பொருள் தவிர்ப்பு விழிப்புணர்வை பரப்பிய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியைப் பாராட்டினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**